Chundikuli Branch Library

Registerde as a News Pepef

விலை: ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 12 [28-07-1993] புதன்கிழமை ஓசை 160

## குண்டு துளைக்காத காரில் அரசியல்வாதிகள் அக்கறை

பிரபலமான எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவர் தனது பாதுகாப்பு கருதி குண்டு துளைக்க முடியாத கார் ஒன்றை இறக்குமதி செய்ய முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக சுங்க திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தக்கார் 187 மில்லியன் ரூபா என தெரிவிக்கப்படுகிறது. இந்த குண்டு துளைக்க முடியாத காரை இறக்குமதி செய்வதற்காக உயர்மட்ட சுங்க அதிகாரிகளையும் அணுகியுள்ளார் என்றும் கூறப்படுகிறது. இதேவேளை அமைச்சர் ஒருவரும் 80மில்லியன் ரூபா பெறுமதியான குண்டு துளைக்க முடியாத கார் ஒன்றை தருவிப்பதில் தீவிரமாக முயற்சித்து வருகிறார் என கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



கல்வியங்காடு இராசவீதியில் நேற்று சிறிலங்கா விமானப் படையின் இரு சுப்பர் சொனிக் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி கருகிச்சிதைந்து கிடக்கும் சிலரது உடல் உறுப்புக்களை முதலாவது படத்திலும், குடும்பஸ்தர் ஒருவர் பலியாகிக்கிடப்பதை இரண்டாவது படத்திலும், தரைமட்டமாகியுள்ள வீடொன்றை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# 'சுப்பர் சொனிக்'கின் கோரத் தாண்டவம்; மாணவர், பொதுமக்கள் உடல் சிதறிப் பலி!

## 6 சடலங்கள் மீட்பு; சிறுவனைக் காணவில்லை கல்வியங்காடு - கோப்பாயில் சம்பவம்

(நமது நிருபர்)

கல்வியங்காடு, கோப்பாய் பகுதியில் நேற்று இரண்டு சுப்பர்சொனிக் விமானங்கள் இரண்டு முறை நடாத்திய குண்டு வீச்சு தாக்குதலில் மூன்று பள்ளிச் சிறுவர்கள் உட்பட அறுவர் உடல் சிதறிப் பலியாகினர். ஆறுபேர் காயமடைந்தனர். ஆஸ்பத்திரி, ஆலயம், தொழிற்சாலை, வீடுகள் கடைகள் என்பன பெரும் சேதமடைந்தன. இச்சம்பவத்தின் போது பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த சிறுவன் ஒருவரைக் காணவில்லை. கல்வியங்காடு இராசவீதியிலும், கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு அருகிலும் கோப்பாய் மத்திய பகுதியிலும் இக்குண்டு வீச்சு தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

## உருக்குலைந்த நிலையில் சிதறிக் கிடந்த சடலங்கள்

(சசிதரன்)

கல்வியங்காடு இராச வீதியில் நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சுப்பர் சொனிக் விமானங்கள் நடத்திய தாக்குதலினால் அப்பகுதி ஓர் இடுகாடு போல்

யாளர் மேலும் விபரிக்கையில்,

### கருகிய நிலையில் இடிபாட்டினுள் சிறுமி

புகைமண்டலம் சிறிது சிறிதாக விலகியபோது வீதியோரத்தில் இடிபாடுகளின்

மீட்டு வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். இராச வீதி யூடாக இச்சிறுமி பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது திடீரென வந்த சுப்பர் சொனிக் விமானங்கள் தாக்குதல் நடத்த எத்தனித்த

# கல்வியங்காடு - கோப்பாயில் சம்பவம்

(நமது நிருபர்)

கல்வியங்காடு, கோப்பாய் பகுதியில் நேற்று இரண்டு சுப்பர்சொனிக் விமானங்கள் இரண்டு முறை நடாத்திய குண்டு வீச்சு தாக்குதலில் மூன்று பள்ளிச் சிறுவர்கள் உட்பட அறுவர் உடல் சிதறிப் பலியாகினர். ஆறுபேர் காயமடைந்தனர். ஆஸ்பத்திரி, ஆலயம், தொழிற்சாலை, வீடுகள் கடைகள் என்பன பெரும் சேதமடைந்தன. இச்சம்பவத்தின் போது பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த சிறுவன் ஒருவரைக் காணவில்லை. கல்வியங்காடு இராசவீதியிலும், கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு அருகிலும் கோப்பாய் மத்திய பகுதியிலும் இக்குண்டு வீச்சு தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. நேற்றுக் காலையில் மூன்று மணிநேர இடைவெளியில் மொத்தம் எட்டுக்குண்டுகள் இப்பகுதியில் வீசப்பட்டன.

காலை 7.45 மணியளவில் வட்டமிட்ட இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் கல்வியங்காடு இராசவீதிப் பகுதியில் நான்கு குண்டுகளை அடுத்தடுத்து வீசித்தள்ளின. இவற்றில் இரண்டு இராசவீதிக்கு அருகிலுள்ள மக்கள் குடியிருப்புகள் மீது வீழ்ந்து வெடித்ததில் அறுவர் உடல் சிதறிப் பலியாகினர். மூவர் காயமடைந்தனர். பலியானவர்கள் சிலரது உடல்களில் எரிகாயங்கள் காணப்பட்டன. இதனால் குண்டில் எரிகாயங்களை ஏற்படுத்தக்கூடிய இரசாயனங்கள் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. மேலும் ஒரு சிறுவனைக் காணவில்லை என அவரது பெற்றோர் தேடியவண்ணம் இருந்தனர்.

இதேவேளை பலியானவர்களில் நால்வரது சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

(3ஆம் பக்கம் பார்க்க)

## சுப்பர் சொனிக் தாக்குதலில் பலியானோர் விபரம்

(நமது நிருபர்)

இராச வீதியில் சிறிலங்கா விமானப்படையின் இரு சுப்பர் சொனிக் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய அகோர குண்டு வீச்சு தாக்குதல்களுக்கு இலக்காகி ஆறுபேர் பலியானதுடன் மூவர் காயமடைந்தனர்.

மேற்படி சம்பவத்தில் சிக்கி பலியானோரில் கந்தையா சண்முகநாதன் [வயது 65] அவரது பேரன் பாலச்சந்திரன் அஜித [வயது 9] அவ்வழியால் சென்ற தங்கராஜா கஜேந்திரன் [வயது 9], செபஸ்தியாம்பிள்ளை செல்வகாந்தி [வயது11] ஆகியோரது சடலங்கள் அடையாளம் காணப்

(3ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாயில் மூவர் காயம்; ஆஸ்பத்திரி, வீடுகள் சேதம்

(நமது நிருபர்)

கோப்பாய் பகுதிக்கு நேற்றுக் காலை 10.45 மணியளவில் வந்த இரு சுப்பர்சொனிக் விமானங்கள் மக்கள் குடியிருப்புகளை அண்டிய பகுதிகளில் இரு தடவைகளில் நான்கு குண்டுகளை வீசின. இதனால் மூவர் காயமடைந்ததுடன் வைத்தியசாலை மற்றும் வீடுகளும் சேதமடைந்தன.

கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு சமீபமாக வீழ்ந்து வெடித்த இரு குண்டுகளினால் எஸ். இந்துமதி (வயது 23) ரி. அலோசியஸ் (வயது 23) தர்மராசா அழகேஸ்வரன் ஆகியோர் காயமடைந்தனர்.

இதன்போது கோப்பாய் அரசினர் மருத்துவமனை சேதமடைந்தது கூரைகள், கண்ணாடிகள் உடைந்து காணப்பட்டன. இதைத் தொடர்ந்து அந்த கடமையாற்றிய ஊழியர்கள் பாதுகாப்பு கருதி

(3ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியங்காட்டில் ஆலயம், வீடுகள் சேதம்

(நமது நிருபர்)

இராச வீதிக்கும் விளையாட்டு அரங்க வீதிக்கும் இடையில் சிறிலங்கா விமானப்படை சுப்பர் சொனிக் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சு தாக்குதல்களினால் இராச வீதியில் உள்ள முருகன் ஆலயம் சேதமடைந்ததுடன் சண்முகநாதன் என்பவரின் இரு வீடுகள் தரைமட்டமாகியதுடன் மூன்று கடைகளும், அலுமினியம் தொழிற்சாலை ஒன்றும் பலத்த சேதமடைந்தன.

அத்துடன் பாஸ்கரன், கந்தசாமி, ராசதுரை, குணரட்னம், மகாலிங்கம், சத்தியசீலன், கனகலிங்கம், பொன்னன், நடேசன், பரமேஸ்வரன், செல்வரட்ணம், சண்முகலிங்கம், துரைமணி, பரராஜசிங்கம், பாலச்சந்திரன், அமுதம்மா ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன.

## வாகன உதவி செய்ய மனிதநேய நிறுவனம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு இராச வீதியில் நேற்றுக் காலை நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களில் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கு அப்பகுதியை அண்மித்து அமைந்துள்ள மனிதநேய நிறுவனம் ஒன்றிடம் வாகன உதவி கேட்கப்பட்டபோது அவர்கள் மறுத்து விட்டதாகதெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் நடைபெற்ற சமயம் மேற்படி அலுவலகத்தில் சில வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இருந்தும் உதவி கேட்டுப் போனவர்களுக்கு அங்கிருந்தவர்கள் வாகனம் தரமறுத்து விட்டு அலுவலக கதவுகளைப் பூட்டி விட்டதாக தெரிவிக்கப்பட்டது. (நி), (பா)

## கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி பூநகரி படகுச்சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

வீடியோ [ஒளிப்பதிவு] ஓடியோ [ஒலிப்பதிவு] உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 00 மணிக்கு அரசியல்துறை யாழ். மாவட்ட செயலகம் கோண்டாவிலில் நடைபெறவுள்ளதென தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். இக் கலந்துரையாடலில் உரிமையாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் வேண்டியுள்ளனர்.

## அரச அதிபர் பார்வையிட்டார்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு இராச வீதியில் சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய கொடூரத் தாக்குதலினால் ஏற்பட்டசேதங்களை யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். அங்கு அவர் உடைமைகளை, உறவினர்களை இழந்த நிலையில் துயர்தோய்ந்த முகங்களுடன் காட்சியளித்த மக்களிற்கு ஆறுதல் கூறிச் சென்றுள்ளார். (பா) (நி)

# சிதறிக் கிடந்த சடலங்கள்

(சசிதரன்)

கல்வியங்காடு இராச வீதியில் நேற்றுக்காலை சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான சுப்பர் சொனிக் விமானங்கள் நடத்திய தாக்குதலினால் அப்பகுதி ஓர் இடுகாடு போல் சோகமாகக் காட்சி அளித்ததென தாக்குதல் நடந்து சிறிது நேரத்தில் அப்பகுதிக்கு விரைந்த எமது செய்தியாளர் குறிப்பிடுகிறார்

இது குறித்து எமது செய்தியாளர் மேலும் விபரிக்கையில்,

### கருகிய நிலையில் இடிபாட்டினுள் சிறுமி

புகைமண்டலம் சிறிது சிறிதாக விலகியபோது வீதியோரத்தில் இடிபாடுகளின் இடையே எரிந்த நிலையில் சிறுமி ஒருவர் துடிதுடித்துக் கொண்டிருந்தார். அப்பகுதிக்கு ஓடிவந்த மக்கள் இடிபாடுகளை அகற்றி இரத்த வெள்ளத்தில் கிடந்த சிறுமியை மீட்டு வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். இராச வீதி யூடாக இச் சிறுமி பாடசாலைக்கு சென்று கொண்டிருந்த போது திடீரென வந்த சுப்பர் சொனிக் விமானங்கள் தாக்குதல் நடத்த எத்தனித்த போது இதனை அவதானித்த சிறுமி தொழிற்சாலை முன்பாக சைக்கிளை போட்டு விட்டு நிலத்தில் குப்புற வீழ்ந்து படுத்துள்ளார். இவருக்கு

(3ஆம் பக்கம் பார்க்க)

# சாப்பாட்டைப் போடுங்கள் என்றபோதுகுண்டுவீழ்ந்தது

## குண்டுவீச்சில் தப்பிய பெண்

(நமது நிருபர்)

'அம்மா நேரம் போட்டுது சாப்பாட்டைப் போடுங்கள்' என்ற அஜித்தின் குரல்கேட்ட சில வினாடியில் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இதனால் எழுந்த கரும்புகை வீட்டை முற்றாக மறைத்திருந்தபோது ''அம்மா அம்மா'' என குழந்தைகள் அலறிய சத்தம் கேட்டது.

இவ்வாறு நேற்றுக்காலை கல்வியங்காட்டுப் பகுதியில் சிறிலங்காவின் சுப்பர்சொனிக் விமானங்கள் நடத்திய அகோர குண்டு வீச்சுகளில் சிக்கிப் பலியான பள்ளிச் சிறுவன் அஜித்தின் உறவினரான பெண்மணி ஒருவர் நமது நிருபரிடம் கூறினார்.

பயப்பீதியின் மத்தியில் பதற்றத்துடன் காணப்பட்ட அவர் குண்டு வீச்சு பற்றி மேலும் தெரிவிக்கையில்:

''பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதற்காக அவசர அவசரமாக வெளிக்கிட்டுக்கொண்டிருந்தபோது நான் அவர்களுக்கான காலை உணவை தயார் செய்துகொண்டிருந்தேன் அப்போது அயல்வீட்டில் வசிக்கும் அஜித் பள்ளிக்கூடம் போவதற்கு தயாராகிய நிலையில் தாயாரிடம் சாப்பாட்டைத் தரும்படி கேட்டுக்கொண்டிருந்தது எனது காதில் விழுந்தது.

அவ்வேளை திடீரென பெரும் இரைச்சலுடன் விமானங்கள் சுற்றும் சத்தம் கேட்டது அதேவேளை போடப்

[3ஆம் பக்கம் பார்க்க]

# சிறிலங்கா - இந்திய கூட்டு கடல்ரோந்து ஒப்பந்தம்

## இந்திய தரப்பு ஆர்வமாம்

(டில்லி)

சிறிலங்காவுடன் கூட்டு கடல் ரோந்தை பாக்கு நீரிணைப்பகுதியில் மேற்கொள்ளும் பொருட்டு உடன்படிக்கை ஒன்றை செய்வதில் இந்தியா தற்போது ஆர்வம் காட்டி வருவதாக இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடற்படை விவகாரங்களில் இரு தரப்பு ஒத்துழைப்பிற்கான ஏற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக சிறிலங்கா கடற்படையின் பிரதித் தளபதியை இந்தியா அழைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இந்து சமுத்திரத்திலும் வங்களா விரிகுடா பகுதியிலும் கூட்டுக் கடற்படை ரோந்து தொடர்பாக முறைப்படியான சில வகை உடன்பாடுகளை செய்து கொள்ள இந்தியா விரும்புகிறது. பரந்த கடலையும் நீளமானகரையோரத்தையும் கண்காணிப்பதற்கு போதுமான உபகரணங்களை சிறிலங்கா கடற்படை கொண்டிருக்கவில்லை என்பதால் சிறிலங்காவினுள் ஆயுதங்கள் வருவதை தடுப்பதற்கு இந்திய கடற்படையின் கண்காணிப்

[4ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### ஸ்ரீகாந்த்புத்தகசாலை

இந்திய நாவல்கள், டிக்செனறிகள், இலங்கை வெளியீடுகள், ஆங்கில தமிழ் சொற்களஞ்சியம், (மட்றாஸ் டிக்சனெறி)கொமிக்ஸ் மங்கைமலர் கழிவுவிலையில், நல்லூர் உற்ஸவத்தை முன்னிட்டு ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் (சி-7071)

### கொழும்பு ஸ்ருடியோ

நினைவஞ்சலி, சரமகவிக்கு தேவையான (Blocks பழைய படங்களில் இருந்து அந்தியேட்டிக்குத் தேவையான புகைப்படங்கள், உறுதியான றபர்சீல்—ஸ்ரிக்கேஸ் தேவைப்படும்போது எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்;கொழும்பு ஸ்ருடியோ 55 மணிக்கூட்டு வீ . யாழ்ப்பாணம் 6962)

### உடன் விற்பனைக்குண்டு

ஒரு மாதம் வளர்ந்த கைலைன் பிறவுண் சேவல் குஞ்சுகள் இரண்டுகிழமை வளர்ந்தபுறொய்லர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய் (5539)

### மாணவப் பேச்சாளர்களுக்கு

பெரியார்கள், பண்டிகைகள், பொழுது போக்கு செல்லப் பிராணி போன்ற பல விடயங்களில் மாணவர்களுக்கான மேடைப் பேச்சுகள், ''என்னாலும் பேச முடியும்'' ஆசிரியர் கோப்பாய் சிவம். (5537)

### றேடியோ-மணிக்கூடுகளின் சேவிஸ் கட்டணங்கள்

வைண்டிங் கடிகாரங்கள்90/- ஓட்டோமெற்றிக் கடிகாரங்கள்—125/- எலக்ரோனிக் கடிகாரங்கள்-90-, 150/- மேசை சுவர் மணிக்கூடுகள் — 100 — 200/- றேடியோ மட்டும்150/- கசற் றேடியோ—200/-.இவை யாவும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம் (சி-7087)

### தவறிவிட்டது

8-7-93 தாண்டிக்குளத்தில் இருந்து கிளிநொச்சிக்கு 5320 இலக்கமுடைய பஸ்ஸில் பிர


## ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்

நாச்சிமார்கோயிலடி

மேற்படி சனசமூக நிலையத்தினரால் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சமய அறிவுப்போட்டி, விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் வந்துவிட்டன. அவற்றினை மேற்படி சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 31-07 93 சனி, 01 08 93 ஞாயிறு கிழமைகளில் காலை 8 00—12 00 மணிவரையும் பெற்றுக்கொள்ளவும்.

நன்றி

(சி-7088) – நிலைய நிர்வாகத்தினர்

## நவாலி வடக்கு நாச்சிமார் முருகன் ஆலய 5-ம் நாள் அலங்கார உற்சவம்

28-07-93 மாலை

★ தெய்வீகத் தொடர் அருட் பேருரை ''கம்பராமாயணம்'' திரு. தி. திருநந்தகுமார் (தலைவர் கம்பன் கழகம்) நேரம்: 7.30—8 45

★ இணுவையூர் இசை ஞானத்திலகம் திரு. உ. இராதாகிருஷ்ணன குழுவினரின் வயலின் சோலோ நேரம்: 8.45—10 45

★ வழக்காடு மன்றம் நடுவர் இ. ஜெயராஜ் (அமைப்பாளர், கம்பன் கழகம்) பொருள்: ''வாலிவதையில் இராமன் குற்றவாளி'' கம்பன் கழக அங்கத்தவர்கள் பங்குகொண்டு சிறப்பிப்பார்கள்.

நேரம்: 10 45.....

அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

– சி சிவகுமார் சகோதரர்கள் (5-ம் விழா உபயகாரர்)

(5536)

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

### A/L 94 (1 வருட வகுப்பு)

பொருளியல் – S. வரதராஜன்

பொருளியல் I மீட்டல்

பொருளியல் II பாடத்திட்டம் – வரவுசெலவுத் திட்டம்

ஆரம்பம்: 01.08.93 ஞாயிறு 11.00 A.M.

### A/L 95 புதிய பிரிவு

பொருளியல் – S. வரதராஜன்

உற்பத்தி இயல்தகவுவளையி

ஆரம்பம்: 01.08.93 ஞாயிறு 1.00 P.M.

(சி/7082)

## வாஞ்சிநாதன் இளஞ்செழியன் நினைவாக.........

வளங்கொழிக்கும் ஈழநாட்டிலே பிறந்தாய்
மண்ணை மீட்டெடுக்க உறுதி பூண்டாய்
தானை தலைவன் வழியில் நடந்தாய்
எதிரியை வீறுடன் அழித்தாய்
வெற்றிலைக் கேணியிலே காவியமானாய்.

– நண்பன்

(5557) கந்தரோடையூர் - க. விக்கி

## இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

## திட்டமிடல் அதிகாரி

[அனர்த்தங்கள், நிவாரணம், குடிசை]

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறிப்பிட்ட துறைகளில் அனுபவம் ஆற்றல், ஆங்கில அறிவு ஆகியனவுடைய பட்டதாரி விரும்பப்படுவர். விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு 04 08 93க்கு முன் சேரும்படியாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை 06. 08. 93 பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். கிளைத் தலைமையகத்தில் நடைபெறும் தகைமைச் சான்றிதழ் நற்சாட்சிப் பத்திரம் ஆகியன நேர்முகப் பரீட்சையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்கொண்டு கடிதத் தொடர்புகள் வைத்திருக்கப்படமாட்டாது

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
27. 07. 1993

கௌரவ செயலாளர்.

(சி-7091)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 04-05-1978

வீரச்சாவு 28-07-1991

## லெப். றோமன்

[குணேந்திரராசா ஜெயச்சந்திரன்]

[ஆனையிறவில் தடைமுகாம் மீது 2ம் தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார்.]

## இரு இளைஞர்கள் வவுனியாவில் கைது

வவுனியா பகுதியில் சிறிலங்கா இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள்தேடுதல் நடத்திய புளொட் குழுவினர் இரு தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர்

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியை சுற்றிவளைத்துதேடுதல் நடத்திய இக்குழுவினர் சந்தேகத்தின் பேரில் அதே இடத்தைச்சேர்ந்த எஸ். சிவரூபன் வை சிவரஞ்சன் ஆகிய இரு இளைஞர்களைக் கைது செய்து தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டபின் தற்போது பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிய வருகிறது

## குடாநாடெங்கும் மக்கள் அஞ்சலி

ஞாயிறு அதிகாலை மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த பத்து வீர வேங்கைகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக குடாநாடெங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

வீதிகள் வாழை தோரணங்கள் கட்டப்பட்டு காணப்பட்டன. வாகனங்களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

யாழ். நகர ஒலிபரப்புச் சேவையிலும் சோக இசை ஒலிபரப்பப்பட்டது. (21)

## நினைவு கூருகின்றோம்... 1993-07-28

1987ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - தோப்பூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

★ **சுந்தர்** ( - தட்சணாமூர்த்தி - கந்தளாய் - திருமலை)

1989ஆம் ஆண்டு மன்னாங்கண்டலில் இந்தியப் படையினருடனான சமரின் போது விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்கவைத்து. வீரச்சாவெய்திய-

**ஜெகன்** (பத்மநாதன் சந்திரகுமார் - ஜெயந்திநகர்- கி நொச்சி)

யாழ் - கொட்டடிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுடடுக்கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு திருமலை - கடவானைப் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மிதிவெடி விபத்தில் எமைப்பிரிந்த-

**பில்லா** ( - உருத்திரமூர்த்தி - திருமலை)

திருமலை - கட்டைபறிச்சான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பாபு** (ஆ மோகனசுந்தரம் - பதுளை)

தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**குமணன்** (வல்லிபுரம் ஜெயவீரசிங்கம் - புனிதபுரம், கற்கோவளம், பருத்தித்துறை - யாழ்)

1991ஆம் ஆண்டு ஆனையிறவு முகாம் தகர்ப்பு முயற்சியாக ஆ. க. வெ. நடவடிக்கையின் போது தடை முகாம் மீது 2ஆவது தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**குணா** (நற்குணம் குணசீலன் - முனையூர், தம்பிலுவில் - அம்பாறை)

**அன்புச்செல்வன்** (பூபாலபிள்ளை புஸ்பநாதன் - கல்முனை- 03 - அம்பாறை)

**லெப். முரளி** (எட்வின் சிறி - மருதங்குளம், மாங்கேணி - மட்டு)

**சந்திரன்** (முருகேசு ராஜேஸ்கண்ணன் - 85 ஜி பி. ஒழுங்கை, கலலடி - மட்டு)

**கப்டன் சசி** (மாணிக்கராசா சிவகுமார் - விளாங்குளம், கண்டி வீதி - திருமலை)

**லெப். றோமன்** (குணேந்திரராஜா ஜெயச்சந்திரன் - கரைச்சித்திடல், தம்பலகமம் - திருமலை)

**2-ம் லெப். துரை** (சிங்காரராஜ் மனோகர் - கள்ளிமேடு, தம்பலகமம் – திருமலை)

**மணாளன்** (பியதாஸ் விஜயபால் - பாரதிபுரம், மூதூர் - திருமலை)

யா வேக்ஸ், 284 ஸ்ரான்லி
தி.யாழ்ப்பாணம் (சி-7087)

## தவறிவிட்டது

8-7-93 தாண்டிக்குளத்தில் இருந்து கிளிநொச்சிக்கு 5320 இலக்கமுடைய பஸ்சில் பிரயாணம் செய்தபோது உடுப்புக்கள் உள்ளடங்கிய மஞ்சள் பாக் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். நன்றி சி. நடராசா நீர்வேலி மத்திநீர்வேலி
(5376)

## தமிழ்க்கலவன் முதலாம் இடம்

(பருத்தித்துறை)
நாகர்கோயில் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் நகர் கோயில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்று சாதனை நிலைநாட்டியுள்ளது. இவ் ஆங்கில தினப் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களை பாடசாலை அதிபர் திரு ஆறுமுக வடிலேலு பாராட்டியுள்ளார். (25)

## விளையாட்டுப் போட்டி

தேசிய சர்வோதய சிரமதான இயக்கமும், நீர்வேலி மத்திய ஸ்ரீ ரமேஸ்வரி சனசமூக நிலையமும் இணைந்து நடாத்திய பாலர் பாடசாலைக்கான விளையாட்டுப்போட்டிகள் அண்மையில் சனசமூக நிலைய மைதானத்தில் நிலையத்தலைவர் க. கலாதேவன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சர்வோதயச் சிறுவர் பகுதிப் பொறுப்பாளர் செல்வி கா. திலகராணி அவர்கள் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். சர்வோதய மாவட்ட இணைப்பாளர் பா. செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (41)

---

## A/L 93 புதிய பிரிவு

பொருளியல் – S. வரதராஜன்
உற்பத்தி இயல்தகவுவளையி
ஆரம்பம்: **01.08.93** ஞாயிறு 1.00 P.M.
(சி/7082)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 27 – 06 – 1972
வீரச்சாவு: 29 – 06 – 1988

## கடற்புலி மேஜர் அழகன் (தாகூர்)

(மார்க்கண்டு உத்தமசீலன்)
ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை

அழகா!
உன்
தியாகம்
நியாயமடா!
நாளை மலரும்
தேசத்தைப் போல்
அது — புனிதமடா!

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவில் பல்வேறு வழிகளிலும் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை 29-07-93) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்காலிக முகவரி:
வீமன் வீதி,
நாகர்கோயில் மேற்கு,
நாகர்கோயில்,
வடமராட்சி கிழக்கு.

அன்பு அப்பா, அம்மா
சகோதர, சகோதரிகள்.
(5520)

---

## லெப். றோமன்

[குணேந்திரராசா ஜெயச்சந்திரன்]
[ஆனையிறவில் தடைமுகாம் மீது 2 ம் தடவையாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார்.]

அன்பு மைந்தா நீ மரணிக்க வில்லை
தமிழ் மண்ணின் வரலாறு ஆனாய்
பிஞ்சு சுவடு பதித்தாய் திருமலைதனிலே
வீர சுவடு பதித்தாய் கட்டைக்காட்டினிலே
வீர வேங்கையாய் வீரத்துடன் போர்க்களம் மிதித்தாய்
தீரத்துடன் போராடி தமிழ் மானம் காத்தாய்
அண்ணா சிறு விழுதுகள் ஏங்குகின்றோம் இங்கு
சாதனை புரியும் பெரு விருட்சம் போனது எங்கு
தெரியவில்லையே அண்ணா தேடுகின்றோம் எங்கும்
உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

தம்பலகமம்,
திருமலை.
– குடும்பத்தினர்,
(5527)

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
24-01-1974

தாயக மீட்பில்
21-07-1991

## 2-ம் லெப். குயிலன்

(துரைராசா ரசிகரன்)
(சாள்ஸ் அன்ரனி படையணியைச் சேர்ந்தவர்)
திதி – 28-07-93

இவருடன் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

இவரின் 2-ம் ஆண்டு நினைவு தினம் 28-7-93 இன்று இவரது இல்லத்தில் அனுஷ்டிக்கப்படும். இந்நிகழ்வில் சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கொம்மாந்துறை,
வல்வெட்டித்துறை.

உமது பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.
(5546)

---

சந்திரன் (முருகேசு ராஜேஸ்கண்ணன் - 85 ஜி பி. ஒழுங்கை, கலலடி - மட்டு)
கப்டன் சசி (மாணிக்கராசா சிவகுமார் - விளாங்குளம், கண்டி வீதி - திருமலை)
லெப். றோமன் (குணேந்திரராஜா ஜெயச்சந்திரன் - கரைச்சித்திடல், தம்பலகமம் - திருமலை)
2-ம் லெப். துரை (சிங்காரராஜ் மனோகர் - கள்ளிமேடு, தம்பலகமம் – திருமலை)
மணாளன் (பியதாஸ் விஜயபால் - பாரதிபுரம், மூதூர் - திருமலை)
ஆதவன் (சிவலிங்கம் சிவானந்தன் - பூநகர், மூதூர் - திருமலை)
தமிழ்ச்செல்வன் (மாசிலாமணி நிரஞ்சன் – திருமலை)
நெற்போலியன் (ஞானதாஸ் சுரேஸ்குமார் - 25/9, லிங்க நகர் - திருமலை)

துணைப்படைவீரர் -
சுரேஸ் (செல்வராஜா தவபாலசிங்கம் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி - திருமலை
லெப். அஜந்தன் (வேலு ஆனந்தன் - பாண்டியன்குளம் - துணுக்காய்)
2-ம் லெப். தாஸ் (செல்லப்பா குகேந்திரன் - 141 உருத்திரபுரம் - கிளிநொச்சி)
2-ம் லெப் சிகானு (கதிரவேலு கருணேஸ்வரன் - முழங்காவில், பூநகரி - மன்னார்)
சிவதாஸ் (யுவானிஸ் தெம்சியஸ் - 63, தலைமன்னார் கிராமம் - தலைமன்னார்)
ஜெயா (ஜேசுதாஸ் கொனறியூட் - சிறிநீலா சோலை, உயிலங்குளம் - மன்னார்)
சிசில் (இராமையா பொன்னம்பலம் இராஜேந்திரன் - பள்ளிக்குடா - பூநகரி - மன்னார்)
2-ம் லெப். சுபத்திரா [புவனேஸ்வரி சுந்தர் - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்]
2-ம் லெப். ஜஸ்மின் [சத்தியமலர் சின்னத்தம்பி - அல்லாரைவடக்கு, கொடிகாமம் - யாழ்]
சூரியகலா [குமுதினி நடராசா - கரவெட்டி மத்தி - யாழ்]
அனுஷா [ஜெசிந்தா குமாரசாமி - களபாவோடை, ஏழாலை தெற்கு - யாழ்]
அருள் (சத்தியபாமா கிருஷ்ணதேவன் - இடிகுண்டடி, நவாலி வடக்கு, மானிப்பாய் - யாழ்)
நரேஸ் (ஆரோக்கியநாதன் எட்வேட் குணசூரியன் - சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு)
சுபராஜ் [செல்லத்துரை தேவன் - 6-ம் வட்டாரம், வேலணை மேற்கு - யாழ்]

நாட்டுப்பற்றாளரான -
சுரேஸ் [-- குடியிருப்பு, நாவற்குழி - யாழ்]
மட்டுநகரில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட வேப்பவெட்டுவானைச் சேர்ந்த தமிழ் விவசாயி-

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-7086)

சிந்தனைக்கு

தேசிய அநீதியே தேசிய அழிவுக்கு நிச்சயமான பாதை

-வில்லியம் கிளாட்ஸ்ரோன்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 28-07-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05


## ஐ. தே. க. தட்டிக்கழிப்பு

"இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தையே ஒரேவழி. புலிகளுடன் பேசவேண்டும் என்பதே ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் நிலைப்பாடு. ஆனால், அவர்களுடன் பேசவேண்டாம் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன". இவ்வாறு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் மன்சூர் பாராளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இனப்பிரச்சினைக்குத் தீர்வாகாது. நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிப்பதோடு அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பெரியளவில் சீர்கெடுத்து வருகின்றது. இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே, தீர்வைக்காண முடியும் என்பது சிங்கள அரசியல்வாதிகளுக்கு புரியாத தொன்றல்ல. இதனை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவும் சரி, தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவும் சரி, எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் சரி புரிநதே வைத்திருந்தனர் /வைத்துள்ளனர்.

ஆனால், இவர்கள் யாவரும், தமது முடிவிற்கு ஏற்ப இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சி எதிலும் ஈடுபடவில்லை. போட்டி அரசியல் நடத்தி பழகிப் போய்விட்ட இவர்கள அனைவரும், இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைப்பதென்பது, தமது அரசியற் தற்கொலைக்குச் சமமானதொன்றெனக் கருதுகின்றனர். இந்நிலையில், இரு பகுதியினரும் தீர்விற்கான பொறுப்பை எதிர்த்தரப்பினரின் தலையில் கட்டிவிடுவதிலேயே அக்கறையாகவுள்ளனர்.

இந்த வகையில், அரசாங்கக் கட்சியே இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க வேண்டும், அது அவர்களின் கடமை என எதிர்க்கட்சிகள் தெரிவிப்பதும், இனப்பிரச்சினைத் தீர்வு காண்பதற்கு எதிர்க்கட்சிகள் முட்டுக்கட்டையாக உள்ளன என்ற அரசாங்கத் தரப்புக்குற்றம் சாட்டும் வழமையான ஒன்றாக மாறிவிட்டன. இதை ஒத்ததாகவே அமைச்சர் மன்சூரின் குற்றச்சாட்டும் உள்ளது. அதாவது, ஜனாதிபதியின் விருப்பத்திற்கு எதிர்க்கட்சிகள் முட்டுக்கட்டையாகவுள்ளன என்பதாகும்.

ஆனால், அமைச்சர் மன்சூரின் இக் குற்றச்சாட்டு எந்தளவிற்குப் பொருத்தப்பாடானதும்,

# எவர் எதைக் கூறினாலும் நாடு பிளவுபட்டே தீரும்

– குமார் பொன்னம்பலம்

(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதி இங்கு தமிழர் பிரச்சினை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என்கிறார். பிரதமர் நாம் போரும் சமாதானமும் என்ற கொள்கையில் உள்ளோம் என்கிறார். எவர் எதைக் கூறினாலும் நிச்சயமாக நாம் பிளவுபடும் நிலையில் உள்ளோம். இவ்வாறு குமார் பொன்னம்பலம் கொழும்பு தினசரி ஒன்றிற்கு எழுதிய குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இன்றைய அவல நிலைக்கு ஐ. தே. கவோ, சுதந்திரக் கட்சியோ, ஐ ஐ தே. முன்னணியோ தீர்வு எதுவும் முன்வைக்காமையே காரணம். இதற்குக் காரணம் பெரும்பான்மை இனத்தவருக்கு தமிழரை ஏற்றுக் கொள்ள மனமில்லை. அவர்களுக்கு குறைபாடு உள்ளது என்பதை ஏற்க இஷ்டமில்லை. அநீதி களையப்பட வேண்டும் என்பதில் அக்கறையில்லை

வடக்கு கிழக்கிற்கு வெளியே கைதாகும் தமிழர்களின் நிலை என்ன? ஆனால் வெட்கம் கெட்ட தமிழர் தம் உரிமைகளை நிலை நாட்டுவதற்குப் பதிலாக தம்மை விடுவிக்க பொலிசார் கேட்கும் இலஞ்சத்தை கொடுக்கத் தயாராக இருக்கின்றனர். அதேபோல் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படும் தமிழர்களும் தமது சார்பில் சட்டத்தரணிகளை ஆஜர் செய்வதை விரும்பாது இருக்கின்றனரே என்றும் அவர் மேலும் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## ஆர்ப்பாட்டம் நடந்தபோது பின்வாயிலூடாக சென்றேன்

சிறிமாவோ புகார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் அண்மையில் தமது 'வீட்டுக்குவெளியேகட்சியின்ஒரு பிரிவினர் ஆர்ப்பாட்டம் நடத்திய போது பொலிசார் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாது வேடிக்கை பார்த்து நின்றதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

அன்றைய தினம் தாம் தமது உத்தியோகபூர்வ காரை பயன்படுத்த முடியவில்லை என்றும் வெளியில் நின்று ஆர்ப்பாட்டம் செய்தவர்களினால் தாம் வீட்டுக்கு பின் புறவாயிலூடாகவே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# சுதந்திரக்கட்சி பிரமுகர்கள் வீடுகளுக்கு பாதுகாப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அனுரா ஆதரவு கோஷ்டியினரும் எதிர்க்கோஷ்டியினரும் பரஸ்பரம் கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் இறங்கியுள்ளதையடுத்து சுதந்திரக்கட்சியின் பிரமுகர்களின் வீடுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது

பொலிசார் சீருடையின்றி மேற்படி பிரமுகர்களின் வீடுகளுக்கு அருகே நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தர்மசிறி சேனநாயக்கா, ரஜித சேனரட்ண மேர்வின்டிசில்வா எம். பி ஆகியோர்களின் வீடுகள் கைக்குண்டுவீச்சுக்கு இலக்காகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

சுதந்திரக் கட்சியிலிருந்து அனுரா பண்டாரநாயக்கா நீக்கப்பட்டதையடுத்தே மேற்படி கைக்குண்டுவீச்சு சம்பவங்கள் நடைபெற்று வருகிறது

## வடக்கை தமிழ் பிரதேசமாக வைத்திருக்க முடியாது

அமைச்சர் தயாரட்ண தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாறையில் உள்ள எந்த சிங்கள குடும்பத்தையும் நாம் வெளியே குடியமர்த்தவில்லை கிழக்கில் உள்ளவர்களை கிழக்கில் குடியேற்றுவதே எமது நோக்கம் என அமைச்சர் தயாரட்ண தெரிவித்துள்ளார்.

இவ்வாறே வடக்கில் உள்ளவர்களை வடக்கில் குடியேற்றுவோம். வடக்கை 100 சதவீதம் தமிழ் பிரதேசமாக வைத்திருக்க நினைப்பது சரியல்ல. அப்படி கொழும்பையும் தெற்கையும் வைத்திருக்க நினைத்தால் எப்படியிருக்கும் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

## திருக்கோயில் தாக்குதல் 3 அதிரடிப்படை காயம்

சாப்பாட்டை

போறாங்கள் என்று ஒரு குரல் கேட்டது. வெளியே ஓடிவந்த போது இரு குண்டுகள் எம்மை நோக்கி வருவதைக் கண்டு நிலத்திலே வீழ்ந்த வேளை பாரிய சத்தத்துடன் அவை வெடித்தன.

அப்போது கரிய நிறத்தில் எழுந்த புகை இப் பகுதியை முழுமையாக மூடியிருந்ததனால் எதையுமே பார்க்கமுடியவில்லை. என் பிள்ளைகள் அம்மா அம்மா என கத்திய குரல்கள் கேட்டனவே ஒழிய அவர்கள் எங்கு நிற்கிறார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை என்னால் பார்க்க முடியாது துடித்தேன். சில நிமிடங்களில் புகைமண்டலம் சிறிது விலகியபோது அயல்

## லவனிதா குடியிருப்பில் கறுப்பு ஜூலை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கறுப்பு ஜூலை தினம் நேற்று சீவகக் கோட்டங்களினால் நாவற்குழி லவனிதா குடியிருப்பில் புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கனகலிங்கம் தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தமிழீழ அரசியல் துறையை சேர்ந்த அரசண்ணா பேசும் போது; உரிமைக்காக சுதந்திரத்திற்காக போராடும்எம்மை எந்த சக்தியாலும் அடக்கவோ அழிக்கவோ முடியாது என்பதை இந்தபத்தாண்டு காலத்தில் நாம் சிங்கள ஆட்சியாளருக்கு உணர்த்தியுள்ளோம். 1983ஆம் ஆண்டு திருநெல்வேலி சந்திக்கருகாமையில் எம்மவர்களால் நடாத்தப்பட்ட கண்ணிவெடி தாக்குதல் சம்பவத்தில் 13 சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டதை அடுத்து புலிகளை இனங்காண முடியாத சிறிலங்கா இராணுவத்தினர் வீடுகளினுள் இருந்தவர்களையும் தெருவில் சென்றவர்களையும் கொன்று குவித்த தோடல்லாமல் தென்னிலங்கையிலும் தனது கோரச்செயலை சிங்கள இனவெறி கும்பல் மூலம் நடாத்தி பல்லாயிரக் கணக்கான தமிழர்களை கொன்று குவித்ததுடன் நான்கு பக்கங்களும் உயர்ந்த சுவரையுடைய வெலிக்கடை சிறையினுள்ளும் தனது இன வெறியை கட்டவிழ்த்துவிட்டது இவ் இன வெறிக்கு அன்று எமது சகோதரர்கள் ஐம்பது பேருக்குமேல் பலியானார்கள். இவ்வாறு அன்று கொல்லப்பட்ட எம்மவர்களை இந் நாளில் நாம் நினைக்காமல் இருக்க முடியாது. ஆகவே இந்த கறுப்பு ஜூலை 27ஆம் திகதி எங்களால் மறக்க முடியாத ஒரு நாளாகும்.

எதிரியானவன் இத்தினத்தில் நாம் எங்காவது தாக்குவோம் என்று தன்னை பலப்படுத்தியிருந்த வேளையிலும் அவனது இராணுவ முகாமும் மினிமுகாமும் எம்மவர்களால் வெற்றிகரமாக தாக்கி அழிக்கப்பட்டது என்றார்.

இந்நிகழ்வில் வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு. அருணாசலம், யாழ். மாவட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, தீவக அரசியல்துறை பொறுப்பாளர் திரு. செம்மணன், தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழக துணைப்பொறுப்பாளர் திரு. சேரலாதன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (சி) (நி

உருக்குலைந்த

மிக சமீபமாக வீழ்ந்து வெடித்த குண்டுகளின் அதிர்ச்சியால் இவர் தூக்கி வீசப்பட்டதுடன் சுவரின் இடிபாடுகளுக்குள்ளும் சிக்கிக் கொண்டார். இவரது உடல் எரிகாயங்களுக்குள்ளாகியது சைக்கிள் பயன்படுத்த முடியாத அளவிற்கு சிதைந்து காணப்பட்டது. இவருக்கு சற்று தள்ளி சுமார் ஒன்பது வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவர் பாடசாலைக்கு செல்லும் வழியில் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்து இரத்தவெள்ளத்தில் துடிதுடித்துக் கொண்டிருந்தான்.

### மூலஸ்தானத்துள் சிதறிய உடல்கள்

இதன்போது அருகிலிருந்த முருகன் ஆலயம் பலத்த சேதமடைந்திருந்ததுடன் அதன் மூலஸ்தானத்திற்குள்ளும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பல உடல்கள் சிதறிக்கிடந்தன சதைப் பிண்டங்கள் சுமார் 200 மீற்றர் வரையான சுற்று வட்டாரங்களிற்கு தூக்கிவீசப்பட்டிருந்தன பரவிக்கிடந்த சதைப்பிண்டங்களில் சில பொதுமக்களால்கண்டு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டன. இவை வீதியால் வந்து கொண்டிருந்தவர்களு

## மரணம்

நேற்று தாக்குதலுக்காகவட்டமிட்ட இரு சுப்பர் சொனிக் விமானங்களின் பேரிரைச்சலினாலும், குண்டுத் தாக்குதலினாலும் ஏற்பட்ட அதிர்ச்சியினால்தையிட்டியிலிருந்துஇடம் பெயர்ந்து கோண்டாவிலில் வசித்துவந்த வீரகத்தி தாமோதரம்பிள்ளை(வயது67) மரணமடைந்தார்.

இடத்தை பெருமளவு மக்கள் சூழ்ந்துகொண்டனர். இதனை அடுத்து ஸ்தலத்திற்குவிரைந்த தமிழீழக் காவல் துறையினர் நிலைமையினைக் கட்டுப்படுத்தியதுடன் இடிபாடுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதனால் சிலமணி நேரத்திற்குள் இராசவீதி, மக்கள் போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டதுடன் இரு பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதற்கு சற்று தள்ளி கிழக்குப் புறமாக வீசப்பட்ட இரு குண்டுகளில்ஒன்று வெடிக்காத நிலையில் நிலத்துள் புதைந்துள்ளதாக நம்பப்படுகிறது. மற்றைய குண்டு வெடித்ததினால் சில பனை மரங்கள் அறுத்து சில யார் தூரம்வரை தூக்கி வீசப்பட்டுக் கிடக்கின்றன.

உள்ளது. அதாவது, ஜனாதிபதியின் விருப்பத்திற்கு எதிர்க்கட்சிகள் முட்டுக்கட்டையாகவுள்ளன என்பதாகும்.

ஆனால், அமைச்சர் மன்சூரின் இக் குற்றச்சாட்டு எந்தளவிற்குப் பொருத்தப்பாடானதும், நியாயபூர்வமானதும் என்பது கேள்விக்குரியது. ஏனெனல், எதிர்க்கட்சி என்றாலே எதிரியாகப் பாவித்துப் பழகிவிட்ட அரசாங்கக் கட்சியும், எதிர்க்கட்சி என்றால் அரசாங்கத்தை எதிர்ப்பதே தனது கொள்கை எனக் கொண்டுவிட்ட எதிர்க்கட்சிகளும் என்ற நிலை ஆகிவிட்ட சிறிலங்கா அரசியலில், எதிர்க்கட்சியினர் ஒத்துழைக்க வேண்டும் என அரசாங்கம் எதிர்பார்ப்பது யதார்த்த நிலைக்கு மாறுபட்டதொன்றாகும்.

அடுத்ததாக இனப்பிரச்சினை இன்றைய கட்டத்தை அடைவதற்கு சிங்களப் பேரினவாதக் கட்சிகள் இரண்டுமே, தமது பங்களிப்பைச் செய்துள்ளன. எனினும், இன்றைய ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, இதற்கான பெரும் பங்கை ஏற்றுத்தான் ஆகவேண்டும். ஏனெனில், ஐ தே. கட்சியின் 15 வருட ஆட்சிகாலத்திலேயே இனப்பிரச்சினை இன்றைய மோசமான கட்டத்தை அடைந்தது. இந்நிலையில், இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பெரும்பங்கு ஐ தே. கவிடமே உள்ளது.

கடந்த 15 வருட ஆட்சிகாலத்திலும், இனப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு தான்தோன்றித்தனமான தீர்மானங்களை எடுத்து நிறைவேற்றிய ஐ.தே. கட்சி அரசாங்கம், தீர்வை எட்டக்கூடிய ஒரு வழி முறைக்கு மட்டும் ஏன் எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்க வேண்டும் எனக் கோருகின்றது. இதில்நியாயம்எதுவும் இருப்பதாகவில்லை. பயங்கரவாத தடைச்சட்டத்தை கொண்டுவர முயற்சித்த போதும், ஆறாவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வரும் போதும் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பை அரசு கோரிப்பெற்றதா? அன்றி இலங்கை அரசியல் வரலற்றுப் போக்கையே மாற்றிய இந்திய - சிறிலங்கா சமாதான உடன்படிக்கைக்குத் தானும் எதிர்க்கட்சிகளின் சம்மதம் பெறப்பட்டதா?

இதற்கு மேலாக, யுத்தத்திற்காக இராணுவத்தை விரிவாக்கிய போதும், போர்த் தளபாடங்களை வாங்கியபோதும் எதிர்க்கட்சிகளின் சம்மதம் முன் கூட்டியே பெறப்பட்டதா? இந் நிலையில், சமாதான முயற்சிக்கு மட்டும் ஏன் எதிர்க்கட்சிகளை அரசாங்க கட்சி எதிர்பார்க்க வேண்டும்? சமாதானத்திற்கான சரியான வழியைத் தெரிவு செய்ய வேண்டியதுதானே? இதைவிடுத்து பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலையில் சமாதான தீர்வு குறித்து அரசாங்கம் நடந்து கொள்வது. அது தனது கடமைப்பாட்டில் இருந்து விலகுவதோடு மட்டுமல்ல, இனப்பிரச்சினையை மேலும், மோசமான கட்டத்திற்கே இட்டுச் செல்ல வழிவகுக்கும் நடவடிக்கையும் ஆகும். இதன் விளைவு சமாதான ரீதியான தீர்விற்கு வழியே இல்லை என்ற நிலையை உருவாக்கிவிடினும், ஆச்சரியபட ஏதுமில்லை.

---

இவ்வாறே வடக்கில் உள்

பியுள்ளார்.

# திருக்கோயில் தாக்குதல் 3 அதிரடிப்படை காயம்

கடந்த 20 ஆம் திகதி அம்பாறையில் திருக்கோயில் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் சென்ற ஜீப் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் மூன்று அதிரடிப்படையினர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் ஒருவர் விசேட அதிரடிப்படை சப் இன்ஸ்பெக்டர் எனக் கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

காட்டில் சடலம் ஒன்று கிடப்பதாக கிடைத்த தகவலை அடுத்து அதிரடிப்படையினர் அப்பகுதிக்கு சென்ற போதே அவர்கள் பயணம் செய்த ஜீப் புலிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்

மோசமாக காயமடைந்த அதிரடிப்படை சிப்பாய்ஒருவர் பதுளை ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

---

## வெல்லக்கட்டி உற்பத்தி

கிளிநொச்சியில் பசுப்பாலை மூலப்பொருளாகக் கொண்டு சிந்து பால் வெல்லம் என்னும் பெயரில் பால் வெல்லம் தயாரிக்கும் திட்டமொன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கனகபுரம், அம்பாள் நகர், விநாயகர்புரம் போன்ற இடங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது இதன் மூலம் கால்நடை உரிமையாளர்கள் பசுப்பாலை சந்தைப்படுத்தும் வாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

தற்போதுமாதமொன்றுக்கு சுமார் 3 லட்சம் பால் வெல்லக்கட்டிகள் உற்பத்தி செய்யப்படுவதோடு இதுவரையும் 25 வறிய குடும்பங்களைச்சார்ந்தோர் வேலை வாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

கிளிநொச்சிக் கோட்டத்தின் ஏனைய வட்டத்திலும் இத்திட்டத்தை விரிவுபடுத்தும் முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் ஈடுபட்டு வருகிறது.

---

## சுப்பர்சொனிக்கின் கோரத்

இரு சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன. அடையாளம் காணப்படாமல் உள்ளசடலம் காணாமல் போனதாக கூறப்படும் கந்தசாமி கலைச்செல்வன் [வயது10, திருநெல்வேலி கொலனி] என்பவருடைய என கூறப்பட்ட போதும் பெற்றோர் ஏற்க மறுத்து விட்டனர்.

மேலும் அப்பகுதியிலிருந்த தொழிற்சாலை, ஆலயம் மூன்று வீடுகள், கடைகள் என்பன பலத்த சேதமடைந்தன. மற்றைய இரண்டு குண்டுகள் அருகிலுள்ள தோட்டப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் சுற்றியுள்ள சில வீடுகள் சேதமடைந்தன. பல பனை மரங்கள் குண்டுச் சிதறல்களால் வெட்டி வீசப்பட்டிருந்தன.

இதேவேளை காலை 10.45 மணியளவில் வந்த இரண்டு சுப்பர் சொனிக் விமானங்கள் அடுத்தடுத்து வீசிய நான்கு குண்டுகளில் இரண்டு கோப்பாய் அரசினர் வைத்திய சாலைக்கு அருகிலுள்ள வளவில் வீழ்ந்து வெடித்ததில் மூவர் காயமடைந்தனர். வைத்தியசாலை பெரும் சேதமடைந்தது. அருகிலுள்ள சில வீடுகளும் சேதமடைந்தன. ஏனைய இரண்டு குண்டுகளும் கோப்பாய் மத்தியிலுள்ள தென்னந் தோட்டமொன்றில் வீழ்ந்தன. அவற்றிலொன்று வெடிக்காத நிலையில் மண்ணில் புதைந்துகிடக்க காணப்பட்டது.

அவர்கள் எங்கு நிற்கிறார்கள், அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை என்னால் பார்க்க முடியாது துடித்தேன். சில நிமிடங்களில் புகைமண்டலம் சிறிது விலகியபோது அயல் வீடுகள் இடிந்து நொருங்கிக்கிடந்ததைக் கண்டேன் என்றார்

சுப்பர்சொனிக்

பட்டுள்ளன.

இவர்களில் அஜித், கஜேந்திரன் ஆகிய இருவரும் கல்வியங்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் என்பதும், செல்வகாந்தி முத்துத் தம்பி மகாவித்தியாலய மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே வேளை மேற்படி சம்பவத்தில் பலியான இருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் அடையாளம் காணப்படாது யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி சம்பவத்தில் சண்முகநாதன் அன்னம்மா [57], க. குணரட்ணம் [50], இராசரத்தினம் பிரேமலதா [12] ஆகியோர் காயமடைந்து யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றனர்.

---

## கோப்பாயில்

வேறு இடங்களுக்கு தப்பி ஓடியமையால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. அங்கு தங்கி சிகிச்சை பெற்று வந்த நோயாளர்கள் அச்சமடைந்து அங்கிருந்து வெளியேறி தத்தமது வீடுகளுக்கு சென்றதை அவதானிக்க முடிந்தது. இவர்களில் சிலர் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்டிருந்த தாய்மார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் பரமேஸ்வரி, காளிமுனியாண்டி, இரத்தினசிங்கம், செல்லையா, நல்லையா ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து கோப்பாய் மத்தியில் வீசப்பட்ட குண்டுகளினால் ஜீவாமிர்தம், இராசரத்தினம், மோகன் ஆகியோரது வீடுகள் சேதமடைந்தன.

சதைப்பிண்டங்களில் சில பொதுமக்களால்கண்டு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டன. இவை வீதியால் வந்து கொண்டிருந்தவர்களுடையதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. வீதி அருகிலிருந்த வீடுகளின் இடிபாடுகளுக்குள் சிக்குண்டவர்கள் இழுத்து எடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

## வீதிப்போக்குவரத்து தடை:

இத் தாக்குதலினால் வீதிப் போக்குவரத்து தடைப்பட்டது வீட்டின் முன்பாக நின்ற பாரிய மரமொன்று இரண்டு துண்டாக அறுக்கப்பட்டு வீதியின் குறுக்கே தூக்கி வீசப்பட்டுக் கிடந்தது கட்டடங்களின் சிதைவுகளும்வீதியைமூடிக்கிடந்தன.

அடையாளம் காண முடியாத அளவிற்கு உடல்களின் சில பாகங்கள் வீதியில் காணப்பட்டதால் தமது பிள்ளைகளை தேடிய சில பெற்றோர் துடித்துக் கொண்டிருந்தது நெஞ்சை உருக்கியது

## பிள்ளைகளை தேடிய பெற்றோர்

இவர்கள் தமது பிள்ளைகள் கொண்டுவந்த பொருள்கள் ஏதாவது அப்பகுதிகளில் காணப்படுகின்றனவா என தேடினர். முருகன் ஆலயத்திற்கு சமீபமாக காலின் தொடைப்பகுதியும் சிறுவன் ஒருவரின் வலதுகை முழங்கையுடனும் சிறிய மயிருடன் கூடிய மண்டையோட்டுப் பகுதியும் கீழ்த்தாடையுடன் பற்களும் காணப்பட்டன. இவை எரிந்த நிலையிலேயே காணப்பட்டமையால் எதுவித முடிவிற்கும் அவர்களால் வர முடியாத நிலையில் கதறி அழுதவாறு நின்றனர். இதில் ஒரு சிறுவன் பாடசாலைக்கு வரவில்லை எனவும் வைத்திய சாலையிலும் அனுமதிக்கப்படவில்லை எனவும் தகவல் கிடைத்தது.

குண்டு வீச்சு அனர்த்தங்களால் இப்பகுதி கரிய நிறமாக காணப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற

மற்றைய குண்டு வெடித்ததினால் சில பனை மரங்கள் அறுத்து சில யார் தூரம்வரை தூக்கி வீசப்பட்டுக் கிடக்கின்றன.

மேற்படி குண்டு வீச்சுகளினால் கோண்டாவில் பகுதியில் வயோதிபர் ஒருவர் அதிர்ச்சியால் மரணமானார்.

## மக்கள் பதற்றம்

பலாலி வீதி, உரும்பராய், மானிப்பாய் வீதி, கோப்பாய் வீதி, இராசவீதிகளில் வந்த மக்கள் விமானங்கள் வட்டமிட்டபோது பதற்றமடைந்து வீதிகளில் வீழ்ந்து பாதுகாப்பு தேடிக்கொண்டனர். இவர்கள் மரங்களின் கீழும், மதில் ஓரங்களிலும் பதுங்கிக் கொண்டனர். சிலர் வீதிகளின் குறுக்கே வீழ்ந்து கிடந்தனர்.

## வெடிக்காத நிலையில் குண்டு

கோப்பாய் பகுதியில் வீசிய குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் நிலத்துள் புதைந்து காணப்படுகிறது. இதனால் இதன் மேற்புறநிலம் பிளந்த நிலையில் காணப்படுகிறது. மற்றைய மூன்று குண்டுகளும் வெடித்த இடங்களில் பாரிய குழிகள் காணப்படுகின்றன.

இத்தாக்குதலின் போது தூக்கிவீசப்பட்ட சுமார் 30 கிலோ நிறையுடைய பாரிய கல் ஒன்று 30 அடி உயரமான தென்னைமர வட்டுக்குள்ளே தொங்கிக் கிடக்கிறது. தேங்காய்கள் பல இடங்களிலும் சிதறிக் காணப்படுகின்றன. சுமார் 50 கிலோ நிறையுடைய மிகப்பாரிய கல் ஒன்று 30 யார் தூரம் வரை தூக்கி வீசப்பட்டுள்ளது.

## நோயாளிகள் வெளியேற்றம்

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை நோயாளி ஒருவர் மயங்கி வீழ்ந்தார். நோயாளிகள் பதற்றமடைந்து விடுதிகளை விட்டு கைக்குழந்தைகளையும் ஏந்தியவாறு வீடுகளை நோக்கி அவசர அவசரமாக வெளியேறிச் சென்று கொண்டிருந்தனர். ஊழியர்கள் எவருமின்றி வைத்திய சாலை வெறிச்சோடியது.

**நியூ யாழ் சைனீஸ்**

★ நூடில்ஸ்
★ கோழி புரியாணி
★ பிறைட் றைஸ்

ஏனைய சைனீஸ் உணவு வகைகளுக்கும்

**நியூ யாழ் சைனீஸ்**
124,
முதலாம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம். [5553]



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**விஞ்ஞானமாணி (விவசாயம்) பட்டப்படிப்பு கல்வியாண்டு 1992/93**

மேற்படி பட்டப்படிப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் தகுதியுடையவர்களிடமிருந்து என்னால் 1993 ஆகஸ்ட் மாதம் 16ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அனுமதிக்கான நிபந்தனைகள்:

1. வயது
விண்ணப்பதாரி 1993 ஆகஸ்ட் 16ஆம் திகதியன்று 45 வயதிற்கு குறைந்தவராக இருத்தல்வேண்டும்.

2 கல்வித்தகைமைகள்:
க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் கீழ்க் குறிப்பிட்ட பாடங்களில், ஒரே முறையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்,
1. தாவரவியல்
2. விலங்கியல்
3. இரசாயனவியல்
4. பௌதிகவியல்
5. விவசாயம்

அல்லது
பல்கலைக்கழக பீடச் சபையினாலும் மூதவையினாலும் அங்கீகரிக்கப்பட்ட பிற கல்வித்தகைமைகள்.

அத்துடன்
1. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு வருடத்திற்குக் குறையாத விவசாய டிப்ளோமா நெறியினை பூர்த்தி செய்திருத்தல்


ராவ் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை

# அஜித்சிங் ஜனதாதளம் ஆதரித்து வாக்களிக்க முடிவு

## காங்கிரஸ் அரசிற்கு நெருக்கடி

(டில்லி)

அஜித்சிங் தலைமையிலான ஜனதாதள் கட்சி பிரதமர் நரசிம்மராவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்க முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

டில்லியில் நேற்று நடந்த அஜித்சிங் தலைமையிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இம் முடிவு எடுக்கப்பட்டதாக அஜித்சிங் செய்தியாளர்களிடம் கூறினார். கட்சியின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களையும் கேட்டபின் இம் முடிவை எடுத்ததாகத் தெரிவித்த அஜித்சிங் உறுப்பினர்கள் அனைவரும் இம்முடிவை ஆதரித்ததாகவும்கருத்து வேறுபாடு எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் இன்று பாராளுமன்றத்தில் நடைபெறும் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கலந்து கொண்டு வாக்களிக்க வேண்டும் எனவும் உறுப்பினர்களுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அஜித்சிங் குழுவின் இம் முடிவினால் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசிற்கு பெரும் நெருக்கடி உருவாகியுள்ளதாகவும் இன்று பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள வாக்களிப்பின் போது அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்திருப்பதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தற்பொழுது 532பேர் வாக்களிக்கும் நிலையில் உள்ள இந்திய பாராளுமன்றத்தில் 251 ஆசனங்களை மட்டுமே காங்கிரஸ்கட்சி கொண்டுள்ளது. இந் நிலையில் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இருந்து தப்பித்துக்கொள்ள மேலும் 16 உறுப்பினர்களின் ஆதரவு தேவை. இந் நிலையில் இது வரை காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அளித்துவந்த அ. தி மு. காவும், (11 உறுப்பினர்கள்) ஜனதாதளம் அஜித்சிங் பிரிவும் (20 உறுப்பினர்) பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதாகத் தீர்மானித்திருப்பதைத் தொடர்ந்தே காங்கிரஸ் கட்சிக்கு இந் நெருக்கடி நிலை உருவாகியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சுயேட்சைகளினதும் மற்றும் சிறு எண்ணிக்கையிலான உறுபபினர்களைக்கொண்ட கட்சிகளினாலும் அரசாங்கத்தை பாதுகாத்துக்கொள்ளும் முயற்சியில் காங்கிரஸ்கட்சி மிகவும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த வரிசையில் கேரளா காங்கிரஸ் (ஒரு உறுப்பினர்), சிவசேனை (2 உறுப்பினர்), மற்றும் சுயேட்சை உறுப்பினர் (4 பேர்) ஆதரவு காங்கிரசிற்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை சமாஜவாதி ஜனதாக்கட்சி, பகுஜன் சமாஜ் கட்சியும் வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை எனவும் ஏற்கனவே முடிவு செய்திருந்தமை காங்கிரஸ் அரசிற்கு சாதகமான ஒரு முடிவு என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இருப்பினும் இன்று இறுதி நேரத்தில் உதிரிக்கட்சி உறுப்பினர்கள் எடுக்கும் தீர்மானங்களே காங்கிரஸ் கட்சியின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


**யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்**

(கரும்புலிகள் நினைவாக)
போராளிக் கலைஞர்கள் ஒருங்கிணைந்து
விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக் கழகம்
தயாரித்து வழங்கும்

**"தாயக கனவு"**

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10.30 மணி,
மாலை 4.00 மணி, 6.00 மணி
[சி6959]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 27-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10533
வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:
இல்லை
வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:
41-9211, 27-1027, 24-4108, 26-1741, 42-1547, 24-6846.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

முதலாம் திகதி

## 'வாதுவ' வந்தடையும்

யாழ். குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவு மற்றும் பொருள்களை ஏற்றிக் கொண்டு 'வாதுவ' என்ற கப்பல் தற்சமயம் கொழும்புத் துறைமுகத்தில் நிற்கிறது.

பொருள்கள் யாவும் ஏற்றி முடிந்ததும் அங்கிருந்து புறப்படும் இக் கப்பல் எதிர்வரும் 31ஆம்திகதி அல்லது முதலாம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## சாரணச் சின்னம் சூட்டப்பட்டது

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி சாரணர் சின்னம் சூட்டும் விழா கல்லூரி அதிபர் திரு. ந அனந்தராஜ் (கொத்தணி அதிபர்) தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவிலே அதிபர் திரு. ச. பூபாலசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்குச் சாரணச் சின்னங்களைச் சூட்டி வைத்தார். (25)

## குழந்தை மயிரிழையில் தப்பியது

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானங்கள் நடாத்திய தாக்குதலின் போது வீடுஒன்று சேதமடைந்த போதிலும் அதனுள் இருந்த பாலகன் எதுவித காயங்களுமின்றி தப்பிய சம்பவம் ஒன்று நேற்று நடைபெற்றது.

இராச வீதியில் குண்டுகள் வீழ்ந்து வெடித்த போது சற்றுத்தள்ளி இருந்த த. துரைமணி என்பவரது வீடும் சேதமடைந்தது. இச் சம்பவம் நடைபெற்ற போது தாயார் வெளியில் நின்றதாக தெரிவிக்கப்படுகிறது. இவரது ஒரு வயது பாலகன் தனிமையில் வரவேற்பு அறையில் படுத்திருந்த போதுமேற்கூரை உடைந்து வீழ்ந்துள்ளது. இதன் போது பாலகனின் இருமருங்கிலும் சீற்துண்டுகள் வீழ்ந்துள்ளன. ஆனால் பாலகனுக்கு எதுவித காயங்களும் ஏற்படாதது குறிப்பிடத்தக்கது

# தெரிவுக்குழுவின் கதை ஒரு மாதத்தில் முடியும்?

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்விற்காக அமைக்கப்பட்ட மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் கடைசிக் கூட்டம் அநேகமாக ஆகஸ்ட் 26, 27 ஆம் டத்துடன் தெரிவுக்குழு கலைந்து விடலாம் என கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை மங்கள முனசிங்கவினால் சபாநாயகரிடம் அடுத்த

# ச.தே.செஞ்சிலுவையை வெளியேற்ற கோஷம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற கோஷம் தெற்கில் ஓங்கி வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அண்மையில் நடைபெற்ற பௌத்த குருமார், புத்திஜீவிகள் சங்கத்தினரின் கூட்டததில் இலங்கையில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க நடவடிக்கைகள் பெரும்பான்மை பேச்சாளர்களினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டதாகவும் அச் செய்தி தெரிவிக்கிறது.

வடக்கே சென்ற சிங்கள போர்க் கைதிகளின் உறவினர்கள் திரும்பி வராமைக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே காரணம் என்ற கருத்து நிலவுகின்றதாம். இதே சமயம் யாழ்ப்பாணத்தில்உள்ள கைதிகளின் உறவினர்களை அவர்கள் விரும்பியநேரத்தில் கூட்டிவர சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தயாராக இருப்பதாக பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்

### சிறிலங்கா

பிலேயே சிறிலங்கா பெரிதும் தங்கியிருக்கிறது என இந்து பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே பாதுகாப்பு காரணங்களை முன்விட்டு கொழும்பில் நடைபெறவிருந்த இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழுவின் இரண்டாவது கூட்டம் அடுத்த மாதம் டில்லியிலேயே நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்கள்

### திரு. வேலுப்பிள்ளை சண்முகம்

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும் தற்போது 18/2 விதானையார் வீதியில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை சண்முகம் காலமாகிவிட்டார் இவர் மீனாட்சியின் அன்புக் கணவரும், காலம் சென்ற வேலுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சடகோபன் (சண்முகா றேட்ஸ் சென்ரர்)இன் அன்புத் தந்தையும், யமுனராணியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பாக்கியம், தருமலட்சுமி, காலஞ்சென்ற கந்தசாமி, அன்னமுத்து, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிகுமார், ராஜ்குமார், தயாழினி, ஜெயகுமார், தனுசியா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற செல்லப்பா, திருநாவுக்கரசு, விசாலாட்சி, காலஞ்சென்ற சண்முகராசா, தம்பிராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும். இளங்கோவன் (பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர் ஊர்காவற்றுறை) இன் சிறிய தந்தையாரும் ஆவார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் 28-7-93 இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
18/2, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
ச. சடகோபன் [மகன்]
க. இளங்கோவன் (பெறாமகன்)
(5555)

### திரு. வீரகத்தி தாமோதரம்பிள்ளை

திரு. வீரகத்தி தாமோதரம்பிள்ளை அம்மன் வீதி, தையிட்டி, காங்கேசன்துறையை பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு.வீரகத்திதாமோதரம்பிள்ளை 27-07-93 இல் காலமாகிவிட்டார். இவர் பவளக்கொடியின் அன்புக் கணவரும் ஜெயபவானி (கனடா), ஜெயச்சந்திரன் (ஜேர்மனி), ஜெயவதனி, ஜெயமோகினி, ஜெயமாலினி, ஜெயசீலன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், ராஜேந்திரன்

யாத விவசாய டிப்ளோமா நெறியினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

2. டிப்ளோமாப் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த பின்னர் விவசாயத்துறையில் 5 வருட அநுபவமும், குறைந்தது நடுத்தர தொழில் நுட்ப தரத்தையும் அடைந்திருத்தல் வேண்டும்.

3. பயிற்சிக்காலம்:
4 வருடங்கள்

அனுமதி எழுத்துப் பரீட்சை மூலமும், வாய்மொழிப் பரீட்சை மூலமும் வழங்கப்படும். 1993 செப்ரம்பர் மாதம் நடைபெறவிருக்கும் எழுத்துப் பரீட்சைத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளரிடமிருந்தும் (பரீட்சைக்கிளை) பதில் உதவிப்பதிவாளர்/ விவசாயபீடம், கிளிநொச்சி அவர்களிடமிருந்தும் பெறப்படும் மேலதிக விபரங்களுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களில் மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்துதல் வேண்டும் தபால் மூலமாக விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர் யாழ் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட காசுக்கட்டளை/ தபாற்கட்டளையை சுயவிலாசமிடப்பட்ட முத்திரையிடப்பட்ட 23X10 cm அளவிலான கடித உறையை அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பப் படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

பதிவாளர்.

(சி-7090)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
1973-9-12

தாயக மடியில்
1991-7-22
(ஆனையிறவுச்சமரில்)

# லெப். வாஞ்சிநாதன் இளஞ்செழியன்

(யோகேஸ்வரன் அரவிந்தன்)

திதி: 28-7-1993

தன்மகனாய் நீயிருப்பாய் எனவெண்ணி - உன்தாய்
பொன் மகனாய் உன்னைப் போற்றி வளர்க்க ......
என்மகனாய்க் கிளம்பித் தலைவன் வழியில் ... ...
மென்பாதம் பதித்து மிடுக்கோடு நீ நடந்தாய்!
மண்பிடிக்க வந்த மாற்றானின் படைகளை
மண்டைதீவிலும் ..... கோட்டையிலும் பிளந்தாய்!
விண்ணதிர வீறுநடை போட்டுப் புல்லா
வெளியினிலே மண்காக்க விழுந்து ......
கண்மகனே! என்மகனே! புதுச்சரிதம் படைத்தாய்!
என்தலைவன் வழிநடந்து...., என்நண்பன் திலீபனிடம்
விண்வழியே எனைத்தனியே விட்டுச் சென்றனையோ?
பொன்னாடு காக்க எழுந்த என் தளிரே! பூவே!
என்னோடு நீயில்லை ஆயினும்... உன்முகத்தை
என்தலைவன் படைக்கின்ற இளம்புலிகள் உருவினிலே
கண்ணிமைக்குள் காண்கின்றேன்; பார் மகனே!

- கவிஞர். மு. வே. யோ. வாஞ்சிநாதன்

(இன்று இல்லத்தில், இவரது இரண்டாம் ஆண்டுத் திதி நடைபெறுகிறது)

மயிலியதனை,
தொண்டைமானாறு. (இ)

முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் கடைசிக் கூட்டம் அநேகமாக ஆகஸ்ட் 26, 27 ஆம் திகதிகளில் நடைபெறும் எனத் தெரியவருகிறது. இக்கூட்டனா.

தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை மங்கள முனசிங்கவினால் சபாநாயகரிடம் அடுத்த மாதம் கையளிக்கப்படும் என செய்திகள் தெரிவிக்கின்றன.

## மணலாற்றில் வீரச்சாவடைந்த
# 10 மாவீரர்களுக்கும் மக்கள் இறுதி அஞ்சலி

(முல்லைத்தீவு)

மணலாறுக் கோட்டம் சிங்கள குடியேற்றங்களின் பாதுகாப்பிற்கு அமைக்கப்பட்டிருந்த மண்கிண்டி மலை இராணுவ முகாம், மினிமுகாம்கள், காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவடைந்த 10 வேங்கைகளுக்கும் மக்கள் அஞ்சலி செலுத்தும் முகமாக அவர்களின் வித்துடல்கள் ஒட்டிசுட்டான், நெடுங்கேணி, தண்ணீரூற்று, புதுக்குடியிருப்பு, பொக்கணை, முத்தையன்கட்டு, கற்சிலைமடு ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருந்தன.

இவ் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு மலர் வளையங்கள், பூக்கள் என்பன சாத்தி அஞ்சலி செய்தனர். பின்னர் லெப்டினன்ட் விமலன், லெப்டினன்ட் செந்தூரன், லெப்டினன்ட் வாசன ஆகிய வேங்கைகளின் வித்துடல்கள் இராணுவ மரியாதைகளுடன் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

இதேவேளை லெப். குயிலன் லெப். திருமலைநம்பி (பெர்னான்டோ), லெப். அழகப்பன் (காந்தி], 2ம் லெப்..புகழரசன் ஆகியோரின் புகழுடல்கள் நேற்று அரியாலை சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன. பெருமளவு மக்கள் இம் மாவீரர்களுக்கு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர். பின்னர் இந்நான்கு மாவீரரின் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டன.

# கரையோரப் பகுதி மீது எறிகணைத் தாக்குதல்

மண்டைதீவு மற்றும் காரைநகர்ப் பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுக்காலையில் இடைக்கிடையே மண்டைதீவுப்பகுதிகளில் இருந்து இராணுவத்தினரினால் ஏவப்பட்ட ஷெல்கள் கோட்டை மற்றும் தொலைத்தொடர்பு நிலையத்தை அண்டிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன.

காரைநகர்ப் பகுதிகளில் இருந்து நேற்றுக்காலை 7.45 மணி தொடக்கம் இடையிடையே இராணுவத்தினர் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இவை பொன்னாலை, மூளாய், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. எனினும் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தெரியவரவில்லை.

## மண்ணெய் விநியோகம்

வேலணை ப.நோ.கூ. சங்கம் தனது பாவனையாளரிற்கு குடும்பம் ஒன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் ஒரு லீ. 18ரூபா வீதம் விநியோகித்து வருகிறது. (88)

கணவரும் ஜெயபவானி (கனடா, ஜெயச்சந்திரன் (ஜேர்மனி), ஜெயவதனி, ஜெயமோகினி, ஜெயமாலினி, ஜெயசீலன் ஆகியோரின் அன்பு தகப்பனாரும், ராஜேந்திரன் (கனடா), செல்வநாயகம் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜசிந்தனின் (கனடா) அன்பு பேரனும், சுகந்தனின் அன்பு பெரிய தகப்பனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (28-07-93) பிற்பகல் 2-00 மணியளவில் கோண்டாவில் குடும்ப மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுகந்தன்
(பெறாமகன்)

கோண்டாவில்
கிழக்கு,
கோண்டாவில். (5552)

## திருமதி
# ஞானம்மா இராசையா

திருமதி ஞானம்மா இராசையா 23-07-93-ல் காலமானார் அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு இராசையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முதலித்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வியும், நாகேஸ்வரன் (சுவிஸ்), ரோகிணீஸ்வரி, ஜெகதீஸ்வரன் (சுவிஸ்), மகேஸ்வரன் (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான குகனேஸ்வரி, சிவனேஸ்வரி, கமலேஸ்வரி, செல்வனேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஞானபூரணம், இராசரத்தினம், அன்னம்மா, சிவபாக்கியம், அசுபதி, கைலாயநாதன் [உதவிக் காணி ஆணையாளர், செயலகம் யாழ்ப்பாணம்], காலஞ் சென்றவர்களான இராசதுரை, குமாரலிங்கம் ஆகியோரின் சகோதரியும், யோகநாதன் (ஆசிரியர் யா/ கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை), அருந்ததி (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், அருண்ராஜ் [சுவிஸ்] மதூஷ வின் பேர்த்தியும், வயிரவப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், சோமசுந்தரம், மகாலிங்கம், திருமதி நா. செல்லையா ஆகியோரின் மைத்துனியும், இரத்தினம்-பூமாலை ஆகியோரின் சம்பந்தியும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். ஈமக்கிரியைகள் இன்று 28-07-93 காலை 10-00 மணிக்கு காரைக்கால் மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
இ. யோகநாதன்
(மருமகன்)

"இராசஞான பவன்"
சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில். [5550]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.